# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/50 - 2022 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2022.08.12

*2292/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கி அறிவித்தல்கள்

***1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்***

*1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்*

**பி. நந்தலால் வீரசிங்க,**
நாணயச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2022, ஓகத்து 12.*

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் "2022 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2022, மாச்சு 11ஆந் திகதியிடப்பட்ட 2270/66ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப்


1A - G 37232 — 26 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள், அதன் 4 ஆம் விதி நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக, பின்வரும் புதிய விதியை பதிலீட்டு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"*4.* மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்கின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட **அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள்** தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியதன் பின்னர், இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியுள்ள தொகையினை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) குறித்த ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பில், அதன் மீதான ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்;

(ii) பொருட்கள் ஏற்றுமதி தொடர்பில் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்;

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் அல்லது வசதி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின், கட்டளைகளின் அத்துடன் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து, ஒரு மாத கடமைப்பொறுப்புக்கள் உள்ளடங்கலாக பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவுகள்;

(iv) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு வதியாத முதலீட்டாளர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் அத்துடன்/அல்லது வெளிநாட்டவர்களாக அல்லது இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களாகவிருக்கின்ற வெளிநாட்டு ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள்;

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள்; அத்துடன்

(vi) குறித்த பொருட்கள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய கொள்வனவுகளுக்காக 2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்ட உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்."

EOG *8-0114*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.